**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2024–ம் ஆண்டு நவம்பர் மாதம் 08 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2055, சோபகிருது வருடம், ஐப்பசி திங்கள் 22 ம் நாள்

**இ.ம.எண். 2/2023**

**இ.ம.எண். 21/2023**

**in**

**அ.வ.எண்.52/2022**

1. P.கீதா
2. S.சதீஸ்குமார் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. அன்னபூரணி
2. வட்டாட்சியர் அவர்கள், காங்கயம்
3. தமிழ்நாடு அரசுக்காக,
   மாவட்ட ஆட்சியர் அவர்கள், திருப்பூர் ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்
4. மைனர் கோகுல்
(மைனர் சார்பாக அவரது கார்டியன் தாயார் அன்னபூரணி)
... 4 ம் எதிர்மனுதாரர்/ தரப்பினராக சேர்க்க வேண்டிய நபர்

இம்மனு என் முன்பாக 19.10.2024 ம் தேதி இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.சுப்பிரமணியம், M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதியை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.V.முருகேசன், B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், 4 ம் எதிர்மனுதாரர்/தரப்பினராக சேர்க்க வேண்டிய நபர் தரப்பில்

கற்றறிந்த வழக்கறிஞர் Ms.S.பிரியங்கா, B.A.,LLB., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.

<u>உத்தரவு</u>

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் 4ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 4ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்துக்கொண்டு அசல் வழக்கை மேல்நடத்த உத்தரவு பிறப்பிக்கக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10(2)ன் படி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>1. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-</u>

i) இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் வாதிகள் ஆவார்கள். மனுதாரர்களின் தகப்பனார் லேட். சுந்தரமனோகரனுக்கு வாரிசு சான்று வழங்க உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். அசல் வழக்கில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மேற்படி சுந்தர மனோகரன் 1ம் பிரதிவாதியை கடந்த 2013ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார் என்றும், மேற்படி அன்னபூரணிக்கு இரண்டு குழந்தைகள் என்றும் விசாலாட்சி என்கிற 22 வயது பெண்மகள் மற்றும் கோகுல் என்கிற 5 வயது ஆண் குழந்தை ஆகியோர்கள் உள்ளார்கள். மேற்படி இரண்டு குழந்தைகளும் மேற்படி சுந்தரமனோகரனின் வாரிசுகளாவார்கள். 1ம் பிரதிவாதியின் குழந்தைகள் இருவரையும் வாரிசாக சேர்க்கும் பட்சம் சுந்தர மனோகரனுக்கு வாரிசு சான்று வழங்க உத்தரவிடுவதில் இந்த பிரதிவாதிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

ii) இதில் விசாலாட்சிக்கு 22 வயது ஆவதாகவும், 1ம் பிரதிவாதிக்கும் லேட். சுந்தரமனோகரனுக்கும் கடந்த 2013ல் தான் திருமணம் ஆனதாகவும் குறிப்பிட்டுள்ளார். அதனால் மேற்படி விசாலாட்சி லேட். சுந்தரமனோகரனுக்கு பிறந்த குழந்தை அல்ல என்பது தெளிவாகிறது. எனவே கோகுல் என்பவரை மட்டும் அசல் வழக்கில் சேர்க்க வேண்டியுள்ளது. மேற்படி கோகுல் என்ற குழந்தை பிறந்துள்ள விபரம் மனுதாரர்களுக்கு தாவா தாக்கல் செய்த சமயம் தெரியாததால் தரப்பினராக சேர்க்க இயலவில்லை.

iii) எனவே மேற்படி கோகுல் இவ்வழக்கிற்கு அவசியமான கட்சிக்காரர் ஆவார். 4ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் பிரதிவாதியாக கட்சி சேர்க்காவிட்டால் அவசியமான தரப்பினரை சேர்க்காத காரணத்திற்காக வழக்கு பாதிக்கப்படும். எனவே 4ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இல்லாவிட்டால் பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும். எனவே 4ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 4ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்த அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**<u>2. 4ம் எதிர்மனுதாரர்/தரப்பினராக சேர்க்க வேண்டிய நபர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம் :–</u>**

i) மனுதாரர்கள் மனு பொய் மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இவ்வெதிர்மனுதாரர்/பிரதிவாதி இவ்வெதிர் உரையில் வெளிப்படையாக ஒத்துக்கொண்ட சங்கதிகளைத் தவிர மனுவில் கண்ட மற்ற சங்கதிகளை மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபணம் செய்ய வேண்டியது.

ii) 4ம் எதிர்மனுதாரர் லேட். சுந்தரமனோகரனுக்கு வாரிசு ஆவார். மனுதாரர்களுக்கு மேற்படி விபரம் தாவா தாக்கல் செய்த சமயம் தெரியாது என்று கூறுவது பொய்யாகும். அசல் வழக்கானது வாரிசு சான்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த மைனர் எதிர்மனுதாரரையும் தரப்பினராக சேர்த்துக் கொள்வதில் 4ம் எதிர்மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. எனவே இம்மனுவை மைனர் 4ம் எதிர்மனுதாரரின் நலனுக்கு விரோதமில்லாமல் தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்பதே எதிர்மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கமாகும். 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை.

3. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது, இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

<u>5. தீர்வு:–</u>

6. மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மேற்படி சுந்தர மனோகரன் 1ம் பிரதிவாதியை கடந்த 2013ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார் என்றும், மேற்படி அன்னபூரணிக்கு இரண்டு குழந்தைகள் என்றும் விசாலாட்சி என்கிற 22 வயது பெண்மகள் மற்றும் கோகுல் என்கிற 5 வயது ஆண் குழந்தை ஆகியோர்கள் உள்ளார்கள் என்றும் மேற்படி இரண்டு குழந்தைகளும் மேற்படி சுந்தரமனோகரனின் வாரிசுகள் என்றும் 1ம் பிரதிவாதியின் குழந்தைகள்

இருவரையும் வாரிசாக சேர்க்கும் பட்சம் சுந்தர மனோகரனுக்கு வாரிசு சான்று வழங்க உத்தரவிடுவதில் இந்த பிரதிவாதிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் இதில் விசாலாட்சிக்கு 22 வயது ஆவதாகவும், 1ம் பிரதிவாதிக்கும் லேட். சுந்தரமனோகரனுக்கும் கடந்த 2013ல் தான் திருமணம் ஆனதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அதனால் மேற்படி விசாலாட்சி லேட். சுந்தரமனோகரனுக்கு பிறந்த குழந்தை அல்ல என்பது தெளிவாகிறது என்றும் எனவே கோகுல் என்பவரை மட்டும் அசல் வழக்கில் சேர்க்க வேண்டியுள்ளது என்றும் மேற்படி கோகுல் என்ற குழந்தை பிறந்துள்ள விபரம் மனுதாரர்களுக்கு தாவா தாக்கல் செய்த சமயம் தெரியாததால் தரப்பினராக சேர்க்க இயலவில்லை என்றும் எனவே மேற்படி கோகுல் இவ்வழக்கிற்கு அவசியமான கட்சிக்காரர் என்பதால் 4ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் பிரதிவாதியாக கட்சி சேர்க்காவிட்டால் அவசியமான தரப்பினரை சேர்க்காத காரணத்திற்காக வழக்கு பாதிக்கப்படும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

7. 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் 4ம் எதிர்மனுதாரர் லேட். சுந்தரமனோகரனுக்கு வாரிசு என்றும் மனுதாரர்களுக்கு மேற்படி விபரம் தாவா தாக்கல் செய்த சமயம் தெரியாது என்று கூறுவது பொய் என்றும் அசல் வழக்கானது வாரிசு சான்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த மைனர் எதிர்மனுதாரரையும் தரப்பினராக சேர்த்துக் கொள்வதில் 4ம் எதிர்மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும் எனவே இம்மனுவை மைனர் 4ம் எதிர்மனுதாரரின் நலனுக்கு விரோதமில்லாமல் தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

8. வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அசல் வழக்கானது வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி தான் லேட். சுந்தரமனோகரன் என்பவருக்கு வாரிசுகள்

என்று விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் கடந்த 11.04.2022 அன்று 1ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு 4ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 4ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க உத்தரவிடக்கோரி இம்மனுவானது மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி தான் லேட். சுந்தரமனோகரன் என்பவருக்கு வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் லேட். சுந்தரமனோகரன், 1ம் பிரதிவாதியை 2013ம் ஆண்டில் திருமணம் செய்து கொண்டார் என்றும், அவர்களுக்கு கோகுல் என்ற 5 வயது ஆண்குழந்தை உள்ளதால் மேற்படி கோகுல் என்பவரை அசல் வழக்கில் கட்சி சேர்க்க வேண்டியது அவசியம் என்று மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாகவே உள்ளது.

10. எதிர்மனுதாரர் தரப்பில் அசல் வழக்கானது வாரிசு சான்றிதழ் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த மைனர் எதிர்மனுதாரரையும் தரப்பினராக சேர்த்துக் கொள்வதில் 4ம் எதிர்மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது. எனவே இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்பதாலும் உபயதரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனையை இறுதியாக தீர்க்கும் பொருட்டும் மேலே கண்ட விவாதங்களின் அடிப்படையிலும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2024–ம் ஆண்டு நவம்பர் மாதம் 08 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2024.11.08 19:55:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2024.11.08 19:55:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.